முருகப்பெருமான் துணை

**மகான் பிருகுமகரிஷி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

11.10.2021, திங்கட்கிழமை

1. பிரணவ சக்திமிகு அரங்கனே
பிரணவ சித்திமிகு தேசிகனே
அரணாக மக்களை காத்திட
அறமாக வந்த குருராசனே
2. அரசனே உன் பெருமை கூறி
அகிலமதில் பிலவ தரிவை திங்கள்
இருபானை திகதி சோம வாரம்
(பிலவ வருடம் புரட்டாசி மாதம் 25ம் நாள், 11.10.2021 திங்கட்கிழமை)
இயம்பிடுவேன் துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை பிருகுமகரிஷி யானும்
அருளுவேன் உலகநலம் பெற
வாசி வென்ற ஞானிகள்படை
வையகம் காத்திடும் அம்சமாக
4. ஆகவே அகிலம் தன்னில்
அரங்க ஞானி வாழுகின்ற
செகத்தில் பிரணவக் குடிலில்
சூட்சும சக்தி தந்து இருக்க
5. இருக்கவே ஞானியர் வழியில்
இணைந்து ஏற்று வரும் மக்கள்
கருத்தாக வணங்கி இனிதே
கருணை வேண்டி தீட்சைபெற்று
6. பெற்றுமே ஞானிகள் பூசையை
பிசகில்லா ஏற்று வணங்கி
ஆற்றல்பட ஞானவழிக்கு வர
அனைவருக்கும் அனைத்து ஞானிகளின்
7. ஞானிகளின் அருளாசி கூடி
ஞானபலமும் பெரும் பாதுகாப்பும்
ஞானிகளாகவே ஆகும் வாய்ப்பும்
நல்கியே உலகோர் சிறப்பர்
8. சிறப்பான நிலைக்கு மாற்றி
சித்திகள் அருளும் அரங்கன்
அறம் நிறைந்த பிரணவக் குடிலை
அனுகினாலே உலக மக்களுக்கு

9. மக்களுக்கு கருமவினை அகலும்
மரணமிடர் கட்டங்கள் அகலும்
தேக்கமின்றி பாதுகாப்பு பெருகும்
தெய்வ பலமுமாக மாறும்

10. மாறுதலை செய்து காத்திட
மகத்துவம் புரிந்து அருளும்
ஆறுமுக அரங்கமகா ஞானியே
அற்புதம் படைக்கும் அவதாரம் தன்னால்

11. தன்னிலே அரங்க ஞானியரை
தரணியில் தொடரும் மக்களே
மண்ணுலகை காக்கும் சக்தியாகி
மேன்மையான ஞான ஆட்சிபடைப்பர்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–